## மாந்தை மேற்கு பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 பங்குனி 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பங்குனி 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 மார்கழி 24 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாந்தை மேற்கு பிரதேச சபையின் 2013 மார்கழி 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்காலிக நானாவித வைப்புக்களின் ரூபா 176,370 கூட்டுத்தொகையான செயற்பாடுகள் முடிவுற்ற போதும் இன்னும் தீர்க்கப்படாத வைப்புகளாக கணக்குக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**1.3.2 இணக்கமின்மைகள்**

------------------------

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கு பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு (அ)1988 இன் பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) | இணங்கி நடவாமைகள் |
|---|---|
| **i)விதி இலக்கம் 5 (XII)** | காசு களஞ்சியப் பொருள் முதலியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள உத்தியோகத்திடமிருந்து போதுமான பிணைப் பணங்களைப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| **ii)விதி இலக்கம் 59** | ஓவ்வோராண்டு தொடக்கத்திலும் அரசிறைச் சோதனைக்காரர் அரசிறை மேறபார்வையாளர் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தர் சபை பிரதேசத்தில் கணிப்பீடொன்று மேற்கொண்டு வியாபாரங்கள் பற்றிய நிரல் தயாரிக்கப்பட்டிருக்சு வில்லை |
| **iii)விதி இலக்கம் 76** | சபையினால் பெறவேண்டியுள்ள ரூபா 957,327 தொகையான குத்தகைக்கு விடப்பட்ட கடை வாடகை சம்பந்தமாக சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **iv)விதி இலக்கம் 216** | காணிகள், கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறை தவிசாளரினால் சோதனை செய்விக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ)28 நவம்பர் 2002 அந் திகதியிடப்பட்ட திறைசேறி சுற்றிக்கை இலக்கம் IAI/2002/02 | கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் சம்பந்தமான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிக்கவில்லை |
| 10 ஒக்டோபர் 1990 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றிக்கை இலக்கம் 41/90 | சபை வாகனங்கள் 6 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 1988 இன் 86 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சபையின் 26ஆம் இலக்க அதிகாரச் சட்டம் | உள்ளுராட்சி அதிகார சபைகளுக்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட போது சபையின் அதிகார எல்லையிலுள்ள 09 இறைச்சி கடைகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமையால் சபை வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. |
| (உ)அலங்கை சோசலிச குடியரசின் ந நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம 570 | காலம் கடந்த வைப்புக்களில் பெறுமதி ரூபா 26,966,638 குட்டுத்தொகையான வைப்புக்களைக் கொடுத்து தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஊ)தாபன விதிக் கோவை அத்தியாயம் xxiv இன் பிரிவு 4 | 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய சம்பளக் கடன் பெறுமதி ரூபா 87,150 அறவிட வேண்டிய சம்பளக் கடன் முற்பணங்கள் 2013 திசெம்பர் வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2013 மார்கழி 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 6,871,256 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 3,489,957 ஆகவும் விளைந்திருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கான மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விபரம் | மதிப்பீட்டு வருமானம் ரூபா | உண்மை வருமானம் ரூபா | திரட்டிய நிலுவை 31.12.2013 உள்ளபடி ரூபா |
|---|---|---|---|
| வாடகைகள் | 2,959,400 | 2,519,340 | 957,327 |
| உரிமங்கள் | 550,750 | 370,890 | - |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 6,280,420 | 5,637,722 | 209,180 |
| பற்றாணைச்செலவுகள் குற்றப் பணங்கள், தண்டங்கள் | 1,500,000 | 2,820,730 | 7,110,445 |
| ஏனைய வருமானங்கள் | 1,435,000 | 1,751,226 | - |
| **மொத்தம்** | **12,725,570** | **13,099,908** | **8,276,952** |

**2.2.2 வாடகை**

------------

சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் சபைக்கு சொந்தமான 12 கடைகளின் வாடகை நிலுவை மற்றும் கேள்வித் தொகை நிலுவையாக ரூபா 957.327 தொகையான பணத்தை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 முத்திரைக் கட்டணம்**

----------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 மார்கழி 31 வரைக்கும் கிடைக்கவேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் ரூபா 6,951,195.

**2.2.4 உள்ளகக் கணக்காய்வு**

------------------------------

நிறுவனத்துக்கு போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்